ஸ்ரீ:

ஸ்ரீ ராமாநுஜன் - 273.



சென்னை ஸத்க்ரந்த ப்ரகாசன ஸபையின் சார்பாக மாதந்தோறும் வெளிவருவது

ஆசிரியர்: P. B. அண்ணங்கராசாரியர்.

ஸம்புடம் 23	31—5—71ல் வெளியிட்டது.	ஸஞ்சிகை 9

ஸ்ரீஸூக்திரத்நாகர பாஸ்கராஸ்தமயம்

ஸ்ரீ ஸூக்திரத்நாகரரென்று அந்வர்த்தமான விருதுபூண்ட ஸ்ரீமதுபயவே. (ஆழ்வார் திருநகரி இளையவில்லி சடகோபாசார்ய ஸ்வாமி நிகழும் வைகாசிமீ 8உ (22—5—71) க்ருஷ்ணத்ரயோதசி சனிக்கிழமை யன்று திருவரங்கம் பெரிய கோயிலில் தமது திருமாளிகையில் திருநாடலங்கரித்த கடுஞ்செய்தியைத் தெரிவிக்க நெஞ்சுரமுடையேன். ஸ்வாமி திருநாராயணபுரத்தில் திருமலை அனந்தாண் பிள்ளை திருவம்சத்தில் திருவவதரித்து ஆழ்வார் திருநகரியில் இளையவில்லி திருவம்சத்தில் ஸ்வீக்ருதராகி, செந்தமிழும் வடமொழியும் திகழ்ந்த நாவராய் உபயவேதாந்த ப்ரவர்த்தகராய் விளங்கின மஹா புருஷர். சென்ற ஸாதாரண ஸம்வத்ஸரம் ஆனி மாதத்தில் ஷஷ்ட்யப்தபூர்த்தி மஹோத்ஸவம் கண்டருளினவர். ஆழ்வார் திருநகரியில் திருவவதரித்த மணவாளமாமுனிகள் திருவரங்கம் பெரிய கோயிலுக் கெழுந்தருளி வீறுபெற்ற கணக்கிலே இந்த ஸ்வாமியும் சில ஸம்வத்ஸரங்களாக நம்பெருமாள் ஸன்னிதியில் ஸ்திரவாஸமாக வந்து சேர்ந்து அவ்விடத்திலும திருச்சியிலும் ப்ரவசன ப்ரவணராய் விளங்கி வந்தார். ஸ்வாமியின் ப்ரபாவ விசேஷங்களை நமது ஸ்ரீராமாநுஜன் பலகால் பல ஸந்தர்ப்பங்களை முன்னிட்டுப் பரக்க வெளியிட்டுள்ளது. அந்தோ! இப்பேர்தைய பரிதாபத்தை என்சொல்வோம்!

* கூடிக்கூடி யுற்றார்களிருந்து குற்றம நிற்க நற்றங்கள் பறைந்து * என்று பெரியாழ்வாரருளிச்செய்த கணக்கிலே இந் நிலவுவகை நீத்தவர்களைப்பற்றி குண ...த்தனம் பண்ணுவதென்பது ஸர்வஜநீனமாக நடைபெறுவதொன்று. யார்

பரமபதித்தாலும் ஏதோ வொருவிதமாய் குணகீர்த்தனம் பண்ணுவதும் பரிதாபச் சொற்களையிட்டு நீட்டுவதும் ஒரு வழக்கமாக நிகழ்ந்து வருவதொன்றும். விசேஷித்து, பத்திரிகை நடத்துபவர்களுக்கு இது கர்த்தவ்யமான தொன்ருகவும் அமைந்துவிட்டது. இப்போது நாம் புகழ்வதையும் பரிதபிப்பதையும் இந்த ரீதியிலே எண்ணலாம் சிலர். எண்ணுவாரெண்ணுக. அதிசயோக்தியின்றிக்கே சொல்லுமளவில் "ஸ்ரீ வைஷ்ணவ மஹாமண்டபத்தின் தலையான தொரு தூண் இடிந்து சரிநது விழுந்திட்டதென்றே சொல்லவேணும். ஸ்வாமி பரமபதித்த நான்காவதுநாளில் இஃது எழுதுகிறேனடியேன். இதற்குள்ளே அடியேனுக்குப் பரிதாபக் கடிதங்கள் எழுதினவர்கள் ஐம்பது நபர்களுக்கு மேற்பட்டவர்கள். அவர்களது கடிதங்களிலுள்ள வாசகமே இது. அந்த ஸ்வாமிக்கும் அடியேனுக்கும் நேர்ந்துள்ள ஒரு குடல் துடக்குதான் பலரும் அடியேனுக்கும் பரிதாபக் கடிதங்களெழுதிவரக் காரணமாயது. கீதாசார்யன் "தஸ்மாத் அபரிஹார்யேர்த்தே ந த்வம் சோசிதுமர்ஹஸி" என்கிருன். இதில் அபரிஹார்ய மென்பதொன்றே வாஸ்தவ மென்னலாம். மேற்சொன்னது புருஷதந்த்ரமன்றே.

ஸ்ரீமத் திருமலை அனந்தாண்பிள்ளை கோவிந்தப்பங்கார் ஸ்வாமியென்று திருநாராயணபுரத்தில் பரஸித்தராயெழுந்தருளியிருந்து, நம்பெருமாள் ஸந்நிதியில் ஸ்ரீரங்கநாராயண ஜீயர் ஆஸ்தானத்தை அலங்கரித்தருளியிருந்த மஹாஸ்வாமியின் (பூர்வாச்ரமத்) திருத்தம்பியாருடைய ஜ்யேஷ்டபுத்ரரத்னமாகிய இந்த இளையவில்லிஸ்வாமி அந்த மஹா ஸ்வாமியின் திருவடிவாரத்தில் பழுக்கக் கேட்ட மஹாப்ராஜ்ஞர். இராமாநுச நூற்றந்தாதியில் *பொருந்திய தேசும் பொறையுந் திறலும் புகழும் நல்ல திருந்திய ஞானமும் செல்வமும் சேரும்* என்று ஆசாஸித்த படி அவையெல்லாம் ஒருங்கே சேரப்பெற்று விளங்கின இப்பெரியார் சிறந்த வாக்மியாய்ப் பரம ரஸிகராய் விளங்கியதோடு பூர்வர்சார்ய திவ்ய ஸூக்திகளை வரியடைவே ப்ரவசனம் செய்தருள வல்லவராய் விளங்கினர். ஏறக்குறைய நாற்பது வருஷ காலமாக இந்த ஸ்வாமி அடியேனுக்கெழுதிய ஸ்ரீமுகங்கள் ஆசார்ய ஹ்ருதயாதிகளுக்குத் தோள் தீண்டியாயிருக்கும். ஸாம்ஸாரிக விஷயமாக எழுதினுலுங்கூட "கலையிலங்குமொழியாளர்" என்னலாம்படியே யெழுதுவர். இவ்விஷயத்தில் இவர் அத்விதீயராகவே விளங்கினவர். ஆனது பற்றியே ஸ்ரீ ஸூக்தி ரத்நாகரரென்று விருதுசாத்தப் பெற்றிருந்தார். நாலாறுமாத காலமாகத் திருமேனியில் அபாடவமுண்டாகி, சிறந்த சிகித்ஸைகள் பெற்றும் நம்போல்வாருடைய தௌர்ப்பாக்யமே ப்ரபலமாயிற்று. இவருடைய (ஜநககுல) திருத்தம்பியாரான ஸ்ரீமதுபயவே. திருமலை அனந்தாண்பிள்ளை சதாபிஷேக கோவிந்த நரஸிம்ஹாசாரியரைக் கொண்டு இந்த ஆருத் துயரத்தை ஒருவாறு ஆற்றிக் கொள்வோம்.

ஸ்வாமியின் ஜ்யேஷ்ட குமாரனும் மஹாமேதாவியுமான ஆயுஷ்மாந். இளையவில்லி பூவராஹன். M. A., தீபாதுத்பந்ந ப்ரதீபமாய் விளங்கி வருகிருன் இவனுடைய அப்யுதயங்களை மேன்மேலுங்கண்டு களிக்கும் பாக்கியமொன்றே ஸ்வாமிக்கு இல்லையாயிற்று.

ஸ்ரீ ஸ்வாமியின் சரமச்லோகம் வருமாறு—

𑌵𑌿𑌰𑍋𑌧𑌿𑌕𑍃𑌤𑌿 𑌵𑌤𑍍𑌸𑌰𑍇 𑌵𑍃𑌷𑌭𑌗𑍇 𑌰𑌵𑍌 𑌶𑍍𑌰𑌾𑌵𑌣𑍇
[illegible] ।
[illegible]
[illegible] ॥
[illegible] ॥
[illegible] ॥

நடாதூரம்மாள் திருநக்ஷத்ரோத்ஸவ வார்ஷிகவித்வத் ஸபை

மதுரை ஸமீபத்தில் வில்லூர் அக்ரஹாரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதுபயவே. ஆசுகவி ஸ்ரீநிதிஸ்வாமி சில ஸம்வத்ஸரங்களாக நடத்திவருகிற இந்த வித்வத் ஸபை இந்த ஸம்வத்ஸரம் ஸ்ரீ விஷ்ணு காஞ்சியில் ஸன்னிதி வீதியில் ஸ்ரீ ப்ரதிவாதி பயங்கர மடத்தைச் சேர்ந்த கல்யாண மந்திரத்தில், நேற்று சித்திரை மாதத்தில் ஹஸ்த நக்ஷத்திரம் முதலாக அனுஷ நக்ஷத்திர மளவாக ஐந்து நாள் நடைபெற்றது. ப்ரஸ்துத ஸ்வாமியின் திருமகளின் திருமணத்தை யொட்டி அதற்குப் பூர்வாங்கமாக இந்த வித்வத் ஸபை நடைபெற்றது. உள்ளூர் வாஸிகளும் வெளியூரர்களுமான வித்வான்கள் இருபதின்மர் கூடியிருந்து ஸதஸ்ஸை மிகவும் சிறப்பாக நடத்திவைத்தார்கள். நாவல்பாக்கத்திலிருந்து ஸ்ரீமதுபயவே நரராயணுசார்ய ஸ்வாமியும், நம்பெருமாள் ஸன்னிதியிலிருந்து ஸ்ரீ. உ. வே. மதுராந்தகம் வீரராகவாச்சார்ய ஸ்வாமியும் எழுந்தருளியிருந்தது குறிப்பிடத்தக்கது. ... ... *

ஆழ்வாருத்ஸவமும் அருளாளன் மஹோத்ஸவமும்

*ஏரார் வைகாசி விசாகத்திலவதரித்த தம்மாழ்வாருடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவம் திருவவதார ஸ்தலமான திருக்குருகூரிலும் மற்றும் திவ்ய தேசங்கள் தோறும் நடைபெற்றாலும், *இமையோர் தலைவா!* என்றும் *அயர்வறுமமரர்களதிபதி* என்றும் தாம் உகந்து மங்களாசாஸனம் செய்யப்பெற்ற பேரருளாளனுடைய திருவடிவாரத்தில் நடைபெறுவது லோகோத்தரமும் விலக்ஷணமுமான ப்ரக்ரியை என்பதை அறியாதாரில்லை. நேற்றைய புஷ்ய நக்ஷத்ரம் (சனிக்கிழமை) முதலாகச் சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகின்றது. (7—6—71) திருவிசாகத்தன்று பேரருளாளன் பெரிய திருவடி மஹோத்ஸவங் கண்டருளி, பகல் பன்னிரண்டு மணிக்குமேல் ஆழ்வார் ஸன்னிதிக் கெழுந்தருளி சாத்துமுறை மஹோத்ஸவம் கண்டருளும் பரிசைக் கண்டுகளிக்கக் கண்களாயிரம்வேணும்.

சித்திரை நக்ஷத்திரம் (5—6—71) முதலாகத் தேவப் பெருமாளுடைய வையங்கண்ட வைகாசித் திருநாள் நடைபெறும். "வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல் வந்து மண்ணும் மணமுங்கொண்மின்" என்று பெரியாழ்வார் பரிவுடன் அழைத்தருளியிருப்பதை நினைவூட்டி நிற்கிறோம். இம்மஹோத்ஸவத்தில் நடைபெறும் ததீயாராதனை விசேஷங்களைப்பற்றின விளம்பரம் அடுத்த பக்கம் காண்க.

ஸ்ரீ:

ஸ்ரீ பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமதே ராமானுஜாய நம:



தென்னாசார்ய ஸம்ப்ரதாய ஸபை, காஞ்சீபுரம்,

பெருமாள் கோவில் விரோதிக்ருது ௵ (1971) வைகாசி

ப்ரம்மோத்ஸவ திவ்யப்பிரபந்த கோஷ்டி

ததியாராதனை விண்ணப்பம்.

கோயில் திருமலை பெருமாள் கோயில் என்று சிறப்பித்துக் குலாவப்படும் மூன்று திவ்ய தேசங்களுள் தனிப்பெருமை வாய்ந்த நம் பெருமாள்கோயிலில் வரந்தரும் மாமணி வண்ணனாய் விளங்கும் பேரருளாளன் கண்டருளும் வைகாசி மஹோத்ஸவ அருளிச் செயல் கைங்கரியததில் அந்வயிக்க அபிநிவேசத்துடன் எழுந்தருளும் அத்யாபக ஸ்வாமிகளுக்கு சின்ன காஞ்சீபுரம் கீழண்டை மாட வீதியில் ஸ்ரீ வேதவேதாந்த வைஜயந்தீ பாடசாலையிலும் அதைச்சேர்ந்த ராமானுஜ கூடத்திலும் ஷை உத்ஸவம் பத்து நாட்கள் இரு வேளைகளிலும் விசேஷ ததியாராதனம் முதலிய ஸௌகர்யங்கள் சென்ற பதினொரு வருடங்களாக நடந்து வருகின்றன என்பது ஆஸ்திகர்கள் அனைவரும் அறிந்ததே இதன் வரவு செலவு விவரம் தனிப் பிரதியாகப் பிரசுரமாகி விநியோகிக்கப்பட்டிருக்கிறது. ஸ்வரூபாநுரூபமான இக்கைங்கரியத்தை விரோதிக்ருது ௵ வைகாசி ௴ 22௳ (5-6-1971) முதல் நடக்கவிருக்கும் ஷை மஹோத்ஸவத்தில் மேலும் சிறப்பாகவே நடத்த முனைத்துள்ளோம் ஏற்கெனவே பதினொரு வருடங்களாக ஆஸ்தையோடும் ஆதரவோடும் ஸஹகரித்தவர்களையும், அடியோங்கள் அணுகாததால் விடுபட்ட இதர ஆஸ்திக மஹான்களையும் இயன்றவளவு பொருளுதவி புரிந்து இக்கைங்கரியத்தைப் பூர்த்தி செய்வித்துப் பேரருளாளன் திருவருளுக்குப் பாத்திரராகுமாறு பிரார்த்திக்கிறோம்.

இப்படிக்கு,

K. V. ஸ்ரீநிவாஸாசாரியர், V. P. B. ஸ்ரீநிவாஸாசாரியர்.

அஸஹ்யசோக பரீவாஹ பத்யமாலை

இவ்விதழில் முதலிரண்டு பக்கங்களிற்கண்ட நிர்வேதச் செய்தி நினைக்க நினைக்க வளர்ந்து செல்வதனால் "சோகக்ஷோபே ச ஹ்ருதயம் ப்ரலாபைரேவ தார்யதே" என்று சக்ரவர்த்தி திருமகன் ஸாதித்ததாக (உத்தரராம சரிதத்தில்) பவபூதிகவி கூறிவைத்த கணக்கிலே [illegible].

[illegible] ।
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

"[illegible]
[illegible] !"
[illegible]
[illegible] ॥

(சிறு குறிப்பு;) ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தரசதகத்தில் ஸ்ரீராமாவதாரத்தைப்பற்றி ச்லோகமிட்டருளினபட்டர் "பிராட்டியை ராவணன் அபஹரிக்கவில்லை; உலகில் சிறு மக்கள் கண்மூச்சி விளையாட்டென்று ஒரு லீலை செய்வதுண்டு; 'நான் ஒரிடத்தில் ஒளிந்து கொள்ளுகிறேன், என்னைக் கண்டுபிடி பார்ப்போம்' என்று சொல்லித் தன்னை மறைத்துக் கொள்வதுண்டே, அப்படி தானே வேணுமென்று மறைந்தாளத்தனை" என்றருளிச் செய்தார். இளையவில்லி ஸ்வாமியும் அங்ஙனே ஒரு விளையாடல் செய்கிறார் போலும். (அப்படியாகில் தம்மைத் தாமே காட்டியருள்க.

असह्यशोका अपि संवसाभिज्ञावलोकेन सहन्ति सह्याः ।
अयं तु शोको न च दैव सह्यः! सहस्रसंवत्सरायुःसहाय ॥

सौहार्दहृद्या सवताव साकं संबन्धसाध्य स्मविष्टं चात् ।
हृष्टं च दिष्ट्वा दिवा तच्छोका नित्यौवत्यपि, तत्तु दत्तः ॥

கடிதங்களைப்பற்றி

ஸ்ரீ ஸூக்திரத்நாகரம் இளையவில்லி ஸ்வாமி திருநாடலங்கரித்ததைப்பற்றி நிர்வேதங்கொண்ட பெரியார்கள்—(பெரியார்களென்று என்ன? சிறியார்களுங்கூட) நமக்கு எழுதிவரும் கடிதங்கள் நாடோறும் கிடைத்துக் குவிந்துகொண்டிருக்கின்றன. ஒவ்வொன்றையும் வாசிக்கும்போது, அவரவர்கள் எனக்கு ஸமாச்வாஸனார்த்தமாக எழுதினாலும் பரிதாபந்தான் மிகமிக வளர்ந்து செல்லுகின்றதேயன்றி ஆச்வஸிக்கவிரகில்லையாயிருக்கிறது. கிடைத்துவருங் கடிதங்கள் ஒவ்வொன்றும் பரமபதித்த ஸ்வாமியின் குணாதிசயங்களையும் பலவகைப் பெருமைகளையும் அற்புதமாக வெடுத்துக் காட்டுவதாயிருப்பதால் அக்கடிதங்களையெல்லாம் உலகங்காண வெளியிடவேணுமென்று ஆசையுள்ளது. தற்காலம் அவகாசக் குறைவினால் விடுக்கவேண்டியதாயிற்று. ... ... *

ஸ்ரீரஸ்து.

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீபெரும்பூதூர் எம்பார் ஜீயர்ஸ்வாமியின் அபிநந்தனஸ்ரீமுகம்.

ஸ்ரீ உ. வே. மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய ஸ்வாமியினுடைய சதாபிஷேக மஹோத்ஸவம் புதுடில்லியிலும் சென்னையிலும், காஞ்சீபுரத்திலும் அதிவிலக்ஷணமாகவும், வெகு விமரிசையாகவும் கொண்டாடப் பட்டது யாவருமறிந்த விஷயம். நமது ஸ்வாமியினுடைய பரமகிருபாபரீவாஹ ரூபமான ஆஹ்வானத்தின்பேரில் அடியேன் காஞ்சியில் நடந்த கோஷ்டியில் ஐந்தாறு நாள் அந்வயித்திருந்து ஸத்தை பெறும்படியான பாக்கியம் கிடைத்தது. அந்த கோஷ்டியின் வைபவம் புல்லிய நாவைப்படைத்த அடியேன் பேச்சுக்கு நிலமன்று. ஆழ்வார்களுடைய அருளிச்செயலில் நம் அண்ணாஸ்வாமிக்குள்ள அநிதர ஸாதாரணமான அவகாஹனம் இந்த மஹோத்ஸவமாக வடிவெடுத்தது. ஸ்வாமி தன்னுடைய திருநக்ஷத்ரோத்ஸவம் என்பதை வ்யாஜமாத்ரமாய்க் கொண்டு, நாற்றிசைகளிலுமுள்ள அத்யாபகஸ்வாமிகளை எழுந்தருளப்பண்ணி• அவர்களைக்கொண்டு அருளிச்செயல் ஸேவையைச் செவிக்கினிதாகவும், ஹ்ருதய ஸங்கமாகவும் நடப்பித்து, தாமும் கண்ணும் கண்ணீருமாய் அநுபவித்து ,"ஏகஸ: ஸ்வாது ந புஞ்ஜீத" என்கிறபடி பிறர்களையும் அனுபவிக்கும்படி பண்ணிய அந்த அரிய ஸந்நிவேசத்தினுடைய அழகு வாசாமகோசரம் திருக்கண்ணபுரம் ஸ்ரீ சௌரிப்பெருமாள் விஷயமான திருமொழி எட்டாம்பத்து நூறு பாசுரங்களையும் இரண்டுமணி அவகாசம் நிதானமாகவும், பரமச்ராவ்யமாகவும், 80 திருநாமங்கள் ஸேவித்தபோது, "இச்சுவை தவிர யான்போய், அச்சுவைபெறினும் வேண்டேன்" என்று நினைந்து நைந்து உள்கரைந்துருகினேன் திருக்கண்ணபுரத்தனை அடியேன்.

நம் ஸ்வாமியினுடைய ஸர்வதோமுகமான வைதுஷ்யம் விச்வப்ரஸித்தம், ப்ரவசன சக்தியிலும்; லேகன ஸாமர்த்தியத்திலும் ஸ்வாமிக்கு ஸமானம் ஸ்வாமி தான். தன்னுடைய பரம ஆகர்ஷகமான ப்ரவசனங்களாலும், பத்திரிகைகளாலும், க்ரந்தங்களாலும் ஸ்ரீவைஷ்ணவ உலகுக்குச் செய்திருக்கும், செய்து கொண்டுவரும் மஹோபகாரங்கள் அபரிமிதம். அவர் புரிந்திருக்கும் உபகார பரம்பரைகளுக்கு சிகரம்போல் அமைந்துள்ளன அவர் அருளிச்செய்திருக்கும் பல வகைப்பட்ட க்ரந்தவிசேஷங்கள். ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களுக்கும், பூர்வாசார்யர்களுடைய ரஹஸ்ய க்ரந்தங்களுக்கும், வடமொழியிலுள்ள ஸகல ஸ்தோத்ரங்களுக்கும் நம் அண்ணா அருளிச் செய்திருக்கும் வ்யாக்யானங்கள் மிக மிகச்•சிறந்தவை. வித்வான்கள் மட்டுமன்றிக்கே பாலர்களும், பெண்டிர்களும், பேதைகளும் புரிந்துகொள்ளும்படி எளிய, இனிய, கம்பீரமான நடையில் அவைகள் அமைந்துள்ளன. அவைகள் மூலம், வடமொழியிலும், மணிப்ரவாளத்திலும் மறைந்து, புதைந்து கிடந்த நிதிக்குவியல்களுக்கு நம்முடைய கண்களைத்திறந்து விட்டபெருமை நம் ஸ்வாமியினுடையது. பெரிய வாச்சான் பிள்ளை, நம் பிள்ளை,

மணவாள மாமுனிகள் போல்வாருடைய மணிப்ரவாள க்ரந்தங்களை மந்த மதிகள் இதர ஸஹாய நிரபேக்ஷமாக அதிகரிக்க முடியாமல் அருளிச்செயல்களிலும், ரஹஸ்ய க்ரந்தங்களிலுமுள்ள அரிய பெரிய அர்த்த விசேஷங்களை அனுபவிப்பது அரிதாயிருந்தது. ஸ்வாமியினுடைய வியாக்யானங்கள் அவதரித்த பிறகு, அந்த அர்த்த விசேஷங்கள் எல்லாருக்கும் கையிலங்கு நெல்லிக்கனி போல் ஆயின. பூத காலத்தில் எழுந்தருளியிருந்த கீர்த்திமூர்த்திகளான வித்வத் வரிஷ்டர்கள் பெருக்காறுகள் போல் விளங்கினார்கள். அவர்களுடைய ப்ரவசனங்களும், காலக்ஷேபங்களும், ஸதுபதேசங்களும் அக்காலத்திலுள்ளவர்களுக்குத்தான் அனுபாவ்யமாயிருந்தன. எல்லாருக்கும், எக்காலத்திலும் மடுக்கள்போலே உபஜீவ்யமாயிருக்கும்படி அமைந்துள்ளன நம் ஸ்வாமியினுடைய க்ரந்தங்கள். இந்த க்ரந்தங்கள் மூலம் இவ் வுலகில் ஸ்வாமிக்கு சாச்வதமான, என்றும் அழியாததான, ஆசந்திரார்க்கம் விளங்கும்படியான புகழ் ஏற்பட்டுள்ளது.

“மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்ய” என்றபடி லோகம் உஜ்ஜீவிக்க வேண்டி, எம்பெருமானார் தர்சன ப்ரவர்த்தகராய், தர்சன ரக்ஷகராய், நம்முடைய ஸம்ப்ரதாயத்துக்கு மேன்மேலும் விசேஷமான உபகார பரம்பரைகளைச் செய்துகொண்டு, அரோகதிட காத்ரராய், பல்லாண்டு பல்லாண்டாக ஸ்வாமி இந்த விபூதியிலே எழுந்தருளியிருக்கவேணுமாய் கடாக்ஷிக்கும்படி ஸ்ரீ பெருந்தேவித் தாயார் ஸமேத ஸ்ரீ தேவப்பெருமாள் திருவடிகளிலே நாம் எல்லாரும் ஐககண்ட்யமாய்ப் பிரார்த்திப்பதுதான் நாம் செய்யக்கூடிய எளிய கைம்மாறு. ... *

ஸ்ரீபெரும்பூதூர்,
18—5—71.

ஸ்ரீ எம்பார்ஜீயர் ஸ்வாமி.

சென்னையில் தம்புசெட்டித் தெருவில்வாழும் பிரபல அட்வகேட் ஸ்ரீமதுபயவே
பிள்ளைபாக்கம் பஹுகுடும்பி அனந்தாசாரிய ஸ்வாமி
ஸ்ரீ. பி. ப. அண்ணங்கராச்சாரிய ஸ்வாமி
என்ற எழுத்துத் தொடரில் அமைத்தளித்த

சித்திர கவித்வம்

[கீழேயுள்ள பதினாறுவரிகளிலும் முதலெழுத்தைமட்டும் வரிசையாக வாசித்துப்பார்க்கவேணும்]

ஸ்ரீவைகுந்த வாஸனின் வாத்ஸல்ய நேசன்
பிறவிப் பயனறியாதார்க் குகந்த ஐயன்
பந்தம் சிக்கிப் பாசத்தில் மூழ்கி உழலும்
அந்தகர்க் கருள் வழிகாட்டி நம் க
ண்ணன் கழலிணை நண்ணும் அவ் வை

ணவத் தந்தையாய் வித்வத் வாசனை எ
ங்கும் பரப்பி நிகரில் புகழ் பெற்று
கங்கையிற் புனிதமாய காவிரி அரங்கில்
ராமனின் வில் வண்ணம் கை வண்ணமெனும் பே
ச்சளவில் கண்டோம், செயலில் மகிழ்
சாரதி நீராக, ஆஸ்திகத் தாயக மோ
ரிடம் நின்பதம் சேர்ந்திடில் நிறைமனம்
யநுகிரித்தாயும் அத்திகிரி வரதனும்
ஸ்வாமி ஸேவையைப் போற்றி உகக்க
வான் புகழ் வள்ளலே, மக்கள் மாணிக்கமே
மிகச் சிறியேன் செய் இப்பணி ஏற்றருளே!

Felicitations to Worshipful P. B. A. by humble P. B. A.

இதுவும் ஷி அனந்தாசார்ய ஸ்வாமியின் ஆங்கில சித்திர கவிதை.

Son of an erudite Scholar, saturated with Sanctity,
Radically religious, reared up amidst Austerity.
Insuperably intelligent, imbued with inspired elocution,
Possessed of prolific propensities, proud of their execution.
Benign and brilliant exponent of Veda Sastra,
Architect of ethical life in the way of Geetha.
Nector of Angels and navigator of Astikas,
Novel yet lover of traditions, matured in Mantras.
Avatar of the Acharyas, ambitious and amorous,
Nominee of Alwars, religiously glamorous.
Goodness inherent at heart–a great soul,
Ardent devotee of Lord Varada-beautiful bowl.
Reminiscent of Vaikuntavasis, rosy and elevated,
Alert against critics, but affectionate to cultured,
Charming smile and endearing affable attitude,
Honoured by Pundits and Pamarars in all latitude.
Active and undaunted at trials and tribulations,
Rivals routed in religious pursuits and pursuasions.
Yeoman service to lovers of Tiruppavai lore,
Andal's blessings on thee showered more and more.

வேதவிசாரப் பகுதியில் ஸ்வரபேதக் கண்ணாடி

(முன் தொடர்ச்சி)

வைதிகர்களுக்குச் சில பரீக்ஷைகள்.

வைதிகர்களுக்கு மிகச் சிறந்த விருந்துகள். வேதத்தில் ஒரு பதம். அது ஒரே எழுத்து. ஸம்யுக்தாக்ஷரம். விஸர்க்காந்தமானது. அது ஸ்தல பேதேந உதாத்தமாயும் அநுதாத்தமாயும் ஸ்வரிதமாயும் வருகிறது. அந்த பதம் எது? ஒரே பதத்திற்கு அப்படி மூன்று விதமான ஸ்வரங்கள் (ஸ்தல பேதேந) வருவதற்கு என்ன நிமித்தம்? சொல்லுவீரா? என்று ஒரு மிகச் சிறந்த வைதிகரைக் கேட்டேன். அவர் நான்கு நாழிகை ஆலோசித்து விட்டு "அந்த பதம் இன்னதென்று தெரிந்த பிறகல்லவோ நிமித்தவிசாரம் செய்ய இயலும்; அப்படியொரு பதம் இருப்பதாக ஸ்புரிக்கவில்லை; ஆலோசித்துப் பார்க்கிறேன் ஸ்புரித்தால் வந்து சொல்லுகிறேன்" என்று ஸாதித்துப் போய் விட்டார். நாலைந்து நாள் பொறுத்து வந்து "எவ்வளவு ஆலோசித்தும் ஸ்புரிக்க வில்லையே" என்றார். பிறகு விஜ்ஞாபித்தேன்; "அந்த ஏகாக்ஷரபதம் இன்னதென்பதைச் சொல்லிவிடுகிறேன்; அதற்கு மூன்று ஸ்வரங்கள் வரும் ஸ்தலங்களைச் சொல்லுவீரா?" என்றேன். அந்த பதம் இன்னதென்று தெரிந்து கொண்ட பின்பு அதைப்பற்றி ஆலோசிக்கிறேனென்றார் அந்த வைதிகர்.

(ஸ்வ:) என்கிற பதம் அது என்றேன். இது ஓரிடத்தில் உதாத்தமாயும் மற்றோரிடத்தில் அநுதாத்தமாயும் வேறோரிடத்தில் ஸ்வரிதமாயும் வருகிறதா? என்றேன். இதையும் தேவரீரே சொல்லவேணுமென்றார் அவர்.

𑌨𑌹𑌿 𑌸𑍍𑌵𑌃 𑌸𑍍𑌵𑌂 𑌹𑌿𑌨𑌸𑍍𑌤𑌿 என்றவிடத்தில் உதாத்தம்

𑌸𑌾𑌵𑍃𑌹𑌾𑌰𑌾𑌵𑌶𑍍𑌯𑌃 𑌸𑍍𑌵𑌃 𑌇𑌤𑌿 என்றவிடத்தில் அநுதாத்தம்

*𑌸𑍍𑌵𑌯𑌂𑌯𑍌𑌳 * 𑌸𑍍𑌵𑌰𑍍𑌏𑌤𑌿* என்றவிடங்களில் ஸ்வரிதம்

இல்லையா? என்றேன். அவர் சற்று ஆலோசித்து விட்டு "ஆமாம், உள்ளது தான்" என்றார். இந்த ஸ்வர பேதத்திற்கு நிமித்த பேதம் சொல்ல முடியுமா? என்றேன். 'அதையும் தேவரீரே ஸாதித்து விடலாமே' என்றார். அந்த மஹானிடம் விஜ்ஞாபித்ததை இங்கு வைதிகர்களனைவருமறியத் தெரிவிக்கிறேன்.

(𑌨𑌹𑌿 𑌸𑍍𑌵𑌃 𑌸𑍍𑌵𑌂 𑌹𑌿𑌨𑌸𑍍𑌤𑌿 என்ற விடத்தில் ஸ்வ: என்பது ஸுபந்த பதம். அது, ஸ: ஸா தத் தாம் த்வாம் மாம் த்வம் த்வத் மத் கிம் க: கா இத்யாதி பதங்கள் போலே நியமேந உதாத்தமாகவே வரக்கூடியதாதலால் அப்படி உதாத்தமாக வந்திருக்கிறது.

(𑌸𑌾𑌵𑍃𑌹𑌾𑌰𑌾𑌵𑌶𑍍𑌯𑌃 𑌸𑍍𑌵𑌃 𑌇𑌤𑌿) என்ற விடத்தில் (ஸ்வ:) என்பது ஸுபந்தமல்ல, திஙந்தபதம். [அஸ்மி, ஸ்வ:, ஸ்ம:] திஙந்தபதங்களுக்கு அநுதாத்தம் ஔத்ஸர்க்கிகமாகையாலும் யோஹிப்ராப்த்யாதி அபவாதமில்லாமையாலும் அநுதாத்தமாகவேயிருக்கிறது.

ஸ்வயஜ்யௌ ஸ்வரிதி* என்ற விடங்களிலுள்ள (ஸ்வ:) என்கிற பதம் ஸுபந்தமுமன்று, திஙந்தமுமன்று; "ஸ்வரவ்யயம் ஸ்வர்காக......" என்ற அமரகோசத்தின்படி ஸ்வர்க்க லோகவாசகமான அவ்யயம். இது (க்வ) க்வ என்கிற பதம் போலே நித்ய ஸ்வரிதமாகையாலே ஸ்வரிதமாகவுள்ளது. ஆக இந்த பதத்தின் த்ரைஸ்வர்யத்துக்கு நிமித்த பேதங்கள் நிரூபிக்கப்பட்டன வாயின.

இரண்டாவது பரிக்ஷை

தே என்கிற பதத்தில் எத்தனை வகைகள் உள்ளன?

(உத்தரம்) உதாத்தமாக ஒருவகை. அநுதாத்தமாக ஒருவகை. ப்ரக்ருஹ்யமாக ஒருவகை. ஆக மூன்றுவகைகள் உள்ளன. (இதன்விவரணம் வருமாறு.) தச்சப்தத்தின் மூன்று லிங்கங்களிலும் ப்ரதமாத்விதீயாவிபக்திகளில் (தே) என்கிற ரூபம் வருகிறது. பும்லிங்கத்தில் ப்ரதமாபஹுவசனத்தில் மட்டுமே. ஸ்த்ரீலிங்க நபும்ஸகலிங்கங்களில் ப்ரதமாத்விதீயாவிபக்திகளில் த்விவசனத்தில் மட்டும். ஆக இந்த வகையில் வரும் (தே) என்கிற ரூபம் நியமேந உதாத்தமாகவே யிருக்கும். ஸ்த்ரீலிங்க நபும்ஸகலிங்கங்களில் த்விவசனமாக மட்டுமே வருகின்ற இந்த ரூபம் ப்ரக்ருஹ்யஸம்ஜ்ஞையையடையும். பதக்ரமங்களில் (தே இதி தே) என்று நியமேந ஓதப்படும்.

தே என்கிற இப்பதத்திற்கே அநுதாத்தமுமுண்டு; அது எங்கேயென்னில், யுஷ்மச்சப்தத்தினுடைய சதுர்த்தியிலும் ஷஷ்டியிலும் (துப்யம், தே) (தவ, தே) என்று சொல்லி வருவதுண்டே, அந்த தே பதம் நியமேந அநுதாத்தமாகவே யிருக்கும். அதற்கு ப்ரக்ரஹப்ரஸக்தி கிடையாது. பும்லிங்க தச்சப்த பஹுவசந ரூபத்திற்கும் தத்ப்ரஸக்தி கிடையாது இங்கு நாம் தெரிவித்த மூன்று வகைகளில் (தே) என்கிற பதம் வருமிடங்களை வைதிகோத்தமர்கள் எளிதாகத் தெரிந்துகொண்டிருப்பர்களாதலால் ஸ்தல விசேஷங்களையெடுத்துக் காட்ட முயல்கின்றிலோம்.

இதில் இன்னொரு விசேஷம் ம்ருதுப்ரஜ்ஞர்கள் தெரிந்துகொள்ள வேண்டியதுண்டு. (அதாவது) * தவஸ்ரியே தேக்ஷீயமாணஸ்ய ரிஃ* என்ற விடத்தில் (தே) என்பது ஸம்ஹிதையில் உதாத்தம் போல் ச்ரவித்தாலும் அது பதபாடத்தில் அநுதாத்தமே யாகும். (தவ) என்று அதற்கு அர்த்தமாதலால். இதில் உதாத்த ச்ரவணம் எப்படியுண்டாயிற்றென்ருல், (அக்ஷீயமாணஸ்ய) என்கிற அடுத்த பதத்தின் உதாத்தமான முதலெழுத்து தே என்பதில் ப்ரச்லிஷ்டமாயிருப்பதால் உதாத்த ப்ராபல்யத்திஞல் இதில் உதாத்தச்ரவண முண்டாயிற்று. *தொகாஹ்ம அக்னேவிதாஜ* இத்யாதி பரச்சதஸ்தலங்கள் காண்க. (க்நே) என்கிற எழுத்து அநுதாத்தமாயிருக்கச் செய்தேயும் (அவிமாந்) என்ற அடுத்த பதத்தின் உதாத்தமான முதலெழுத்தன்றோ அதனை (க்நே என்பதை) உதாத்தமாக்கிற்று.

•* நவெதஸ்ய த ஸாமத உதஸ்வ விக* என்ற விடத்தில் பும்லிங்க தச்சப்த ப்ரதமாபஹுவசனமான (தே) என்கிற பதமுள்ளது. அதற்கு அந்த அங்கிரஸ்ஸுக்கள் என்று பொருளாதலால் உதாத்த முள்ளது உபபன்னமே. இங்கு விமர்சநீயமொன்றுமில்லை. ஆக (தே) என்கிற பதத்தின் ஸ்வரபேதமோ ப்ரக்ரஹ—தத்பாவங்களோ எங்கும் வ்யவஸ்திதமாகவேயிருக்குமென்று அறியக்கடவது.

மூன்ருவது பரீக்ஷை

வேதத்தில் (ஸ்ய:) என்று விஸர்க்காந்தமாக ஒருபதம். விஸர்க்கமில்லாமல் (ஸ்ய) என்று மற்ருெரு பதம். விஸர்க்கமுள்ள விடத்தில் அந்த பதம் உதாத்த மாகவே யிருக்கும். விஸர்க்கமில்லாத விடத்தில் அது அநுதாத்தமாகவே யிருக்கும். இந்த வாசிகளைப் பற்றி விளக்கம் தெரிவிக்க வேணும். இப் பரீக்ஷைக்குரிய ஸ்தல விசேஷங்களையும் காட்ட வேணும்.

(உத்தரம்.) [வரீக்ஷகணவவூதிவக்தி] *ஸஷ ஸ்ூ வாஜீ க்ஷிவணிம் த-ரண்யூதி* என்ற விடத்தில் (ஸ்ய:) என்று விஸர்க்காந்தம். உதாத்த ஸ்வரம். ஸ: என்பது ஸ்ய: என்றிருக்கிறது. ஏஷ ஸ்ய வாஜீ— ஸ ஏஷ வாஜீ, என்றபடி. ஆனது பற்றியே உதாத்த ஸ்வரமும் விஸர்க்கலோபமும் ஆயிற்று. *சுயஃ-ஷூவூ-ெவய-ஃ என்ற விடத்திலும் இப்படியே தான். ஸம்ஹிதையில் ஷகாரம் ச்ரவித்தாலும் பத பாடத்தில் ஸகாரமாகவே ஓதப்படுகிறது. ஆகவே ஸ்ய: என்பது தான் பத சரீரம் *ஸவ-ஶா தா விஷூ* என்ற விடத்திலும் ஷகாரச்ரவணம் ஸம்ஹிதையில் மட்டுமே. (ஸ்ய) என்றே பதபாடம். இங்கு மட்டும் விஸர்க்கமும் கிடையாது; உதாத்தமும் கிடையாது. இது திஙந்தபதமாதலால் ஔத்ஸர்க்கிகமான அநுதாத்தமேயுள்ளது. ஸ்யதி என்றும், அவஸ்யதி என்றும் வருமிடங்கள் காண்க. ஸ்ய என்பது லோண் மத்யமைகவசனம். (அவ ஸ்ய வரே) என்றவிடமும் காண்க. (தொடரும்)

கண்ணனும் அண்ணவும் பேசியவை

(இந்த கட்டுரையின் அவதாரிகை ஸ்ரீ ராமாநுஜன் சென்ற விதழில் (272ல்) காணத்தக்கது. நேற்று மார்ச்சு மாதத்தில் நிகழ்ந்த அடியேனுடைய வடநாட்டுச் சிறு யாத்திரையில் நிகழ்ந்த ஸம்வாதமிது. இப்படியொரு மனோபாவனு விசேஷ மென்று கொள்க) விஷயங்களில்மட்டும் கண் வைப்பது.

அண்ணவென்கிற அடியேன் கண்ணனை நோக்கி வினவுவதும்,

கண்ணன் விடையளிப்பதும்.

(அண்ண) *பீதகவாடையுடைதாழப் பெருங்கார் மேகக்கன்றே போல் வீதியா ரவருங் கண்ணபிரானே! கூரத்தாழ்வானருளிச் செய்த அதிமாநுஷஸ்தவத்தில் ஸ்ரீ ராமாத்யவதாரங்களின் அநுபவமும் கலசியிருந்தாலும் உன்னுடைய திவ்ய சேஷ்டிதாநுபவந்தான் அதில் தலைசிறந்து விளங்கா நின்றது. "கோவர்த்தநோ கிரிவரோ யமுநாநதீ ஸா ப்ருந்தாவனஞ்ச மதுரா ச புரீ புராணீ, அத்யாபி ஹந்த! ஸ-லபா: க்ருதிநாம் ஜநாநாம் ஏதே பவச்சரணசாரஜுஷ: ப்ரதேசா:" என்கிற ச்லோகரத்னம் அந்தஸ்தவத்தில் அற்புதமாக அமைந்தது. அதனை அநுதினமும் அநுஸந்தித்து வருகின்றேன். ஆண்டாள் தன்னுடைய திருமொழியில் * மற்றிருந்தீர்கட்கறியலாகா வென்னும் பன்னிரண்டாம் பதிகத்தில்* மன்னு மதுரை தொடக்கமாக வண்துவராபதிதன்னளவும் பேசியனுபவித்த பாசுரங்களை நினைந்து நைந்துள் கரைந்துருகி யநுஸந்தித்து வருகின்றேன். இக்காலத்தில் உன்னை யநுபவிப்பவர்களில் எனக்கு நிகராவாரில்லை யென்று செருக்குக் கொண்டிருக்கிறேன். பிறர் பலரும் இங்ஙனே சொல்லக் கேட்டுமிருக்கிறேன். இத்தகைய ஆனந்தக் கடலில் ஆழ மூழ்கித்திளைக்கு மெனக்கு ஒரு கலக்கம் நெடுநாளாக வுள்ளது; முன்னம் அதைத் தெரிவிக்கிறேன்; தெளிவு பிறப்பிக்கவல்லையே?

(கண்ணு.) என்ன கலக்கமது? உனக்குக் கலக்கமென்றால் அதை நான் ஸஹிக்கவல்லேனோ? உடனே தெரிவிக்க வேணும்; உடனே தெளிவிக்கிறேன்.

(அண்ணு.) நீயருளிச் செய்த கீதையைச் சிறந்தசாஸ்த்ரமென்று உலக மெல்லாம் கொண்டாடி வருகின்றது. மதபேதங்கள் பலபல கிடக்கச் செய்தேயும் ஸகல மதஸ்தர்களும் ஒருமுகமாக ஆதரிக்கும் சாஸ்த்ரம் அதுதானே. அதனை வியாக்கியானிக்கத் தொடங்கின பகவத் பாதாள் (ஆதிசங்கராசார்யர்) தம்முடைய பாஷ்யத்தின் உபக்ரமத்திலும், அவதாராத்யாய மென்று ப்ரஸித்தமான நான்கா மத்யாயத்திலும் – உண்மையாக நீ அவதாரம் செய்யவில்லை யென்றும், * மணி விடம்பிநி தஸ்ய மநோஹரே வபுஷி மக்நமநா: முநிமண்டலீ. ஜபமமுஞ்சத ஹோமமுஞ்சத வ்ரதமமுஞ்சத வேதமமுஞ்சத * என்று கல்லுங் கரையச் சொன்ன ஒரு பரம பக்தருடைய சுலோகத்தில் குலாவப்பட்ட திருமேனியை நீ உள்ளபடி பரிக்ரஹிக்கவில்லை யென்றும் எழுதிவைத்திருக்கிறாரே, இதைக் காணும்போதும் நினைக்கும்போதும் என்னெஞ்சு கலங்குகின்றது. இக்கலக்கத்தை நீ தீர்த்தே யாகவேணும்.

(கண்ணு.) பரமபக்தாக்ரேஸரரான அவர் அப்படி யெழுதிவைத்திருக்க மாட்டாரே; அண்ணு! அவருடைய பங்க்திகளைச் சொல்லு பார்ப்போம்.

(அண்ணு.) அவருடைய கீதாபாஷ்யோபக்ரமத்தில் "ஸ பகவாந்........... ஸ்வமாயயா தேஹவாநிவ ஜாத இவ ச லோகாநுக்ரஹம் குர்வந் லக்ஷ்யதே" என்றுள்ளது; மேலே நான்கா மத்யாயத்தில் (ச்லோ. 6.) * ஸம்பவாமி ஆத்ம மாயயா * என்ற விடத்திலும் "ஸம்பவாமி — தேஹவாந் இவ பவாமி; ஜாத இவ ஆத்மநோ மாயயா; ந பரமார்த்ததோ லோகவத்" என்றுள்ளது. இவற்றால், நீ உண்மையில் திவ்யமங்கள விக்ரஹ பரிக்ரஹம் பண்ணவில்லை யென்றும், பிறந்தது மில்லையென்றும் தெரியவருகின்றதல்லவா? இதைக்கண்டு நான் கலங்காமல் எப்படி யிருக்கமுடியும்? இக்கலக்கத்தை நீ தான் போக்கியருள வேணும்.

(கண்ணு.) ப்ரபந்த காயத்ரி யென்று நீ நித்யமும் ஓதுகின்ற இராமானுச நூற்றந்தாதியில் * மாயனன்றைவர் தெய்வத்தேரினில் செப்பிய கீதையின் செம்மைப் பொருள்தெரியப் பாரினில் சொன்னவிராமாநுசன் * என்று, எனது கீதை யின் யதார்த்தமான பொருளைக் கூறினவராகக் குலாவப்பட்ட பகவத்ராமாநுஜர் தமது பாஷ்யத்தில் உனது இந்தக் கலக்கத்தைத் தீர்க்கவில்லையா? பகவத்பாத பாஷ்ய பங்க்திகளைச் சொன்னது போல பகவத்ராமாநுஜ பாஷ்ய பங்க்திகளையும் சொல்லிக் காண், கேட்போம்.

(அண்ணு.) பகவத்ராமாநுஜரும் இப்படி யெழுதி யிருந்தால் நான் உயிர் வாழ்ந்திருக்கவழியேது? * பிறந்தவாறும் * என்று சொல்லி ஆறுமாஸம் மோஹித் திருந்த நம்மாழ்வாரை யடிபணிந்த ராமாநுஜர் மாயாவாதம் செய்ய ப்ரஸக்தி யுண்டோ? அப்பரமாசார்யர் பாங்காகப் பணித்த ஸ்ரீஸூக்திகளில் "ஜாத இவ

தேஹவாநிவ ச பவாமி'! என்றாற்போன்ற வார்த்தைகளைக் காணமுடியுமா? "யதாபூதஸ்வார்த்தா யதிந்ருபதிஸூக்திர் விஜயதே" என்று கொண்டாடப் பெற்ற அவருடைய திவ்யஸூக்தி யெனும் அம்ருதஸாகரத்தில்—"ச்ரிய: பதி: ஸ்வமேவ ரூபம் தத்தத்ஸஜாதீயஸம்ஸ்தாநம் ஸ்வஸ்வபாவம் அஜஹதேவ குர்வந் அஸ்மதாதீநாமபி ஸமாச்ரயணீயத்வாய அவதீர்ய உர்வ்யாம் ஸகலமநுஜநயநவிஷயதாம் கத:" என்று அவதாரிகையில் அருளிச்செய்துள்ளார்; மேலே அவதாராத்யாயத்தில் "ஸம்பவாமி ஆத்மமாயயா" என்ற விடத்திலும் "ஸ்வேநைவ ரூபேண ஸ்வேச்சயா ஸம்பவாமி "இத்யர்த்த:" என்றருளிச் செய்து (ஆத்மமாயயா) என்பதற்குப் பிறர் கூறும் அவப் பொருளையும் நிரஸித்தே யிருக்கிறார்.

(கண்ண.) இந்த ஸ்ரீ ஸூக்திகளால் உன்கலக்கம் தெளிந்து விட்டதல்லவா? இவை யொன்றும் வேண்டா; அந்த அவதாராத்யாயத்திலேயே "ஜந்ம கர்ம ச மே திவ்யம் ஏவம் யோ வேத்தி தத்வத:, த்யக்த்வா தேஹம் புநர் ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந." என்று நான் சோதிவாய் திறந்து சொல்லியிருக்கிறேனே; இஃதொன்று போராதா உன்கலக்கம் தெளிய? இதில் விசேஷித்து "தத்வத: யோ வேத்தி" என்று சொல்லியிருக்கிறேனே; இதில் அகாரணமாகத் தோன்றிய கலக்கத்தை அறவே விட்டொழித்து மேல் விவக்ஷிதங்களை விளம்புவாயாக.

(அண்ண.) கண்ணா! (ஏவம் யோ வேத்தி தத்வத:) என்று நீ சொல்லியிருப்பது வாஸ்தவம். 'எம்பெருமான் உண்மையாக ஜனிக்கவில்லை உண்மையாக தேஹபரிக்ரஹம் பண்ணவில்லை, என்று அறிவதுதான் தத்வதோ வேதனமென்று அவர்கள் கொண்டார்கள் போலும். இது கிடக்க; நான் உன்னைக் கேட்டுணர வேண்டிய விஷயங்களை நூற்றுக் கணக்காக எண்ணமிட்டிருக்கிறேன். அடைவே கேட்கிறேன். *அஜாயமாநோ பஹுதா விஜாயதே* என்றும், *ஸ உ ச்ரேயாந் பவதி ஜாயமாந:* என்றும் வேதங்களும் நீ திருவவதாரம் செய்தருள்வதைக் கூறியிருக்கின்றன; நீ அவதரித்தேயாகவேண்டிய நிர்ப்பந்த மென்ன? நீயோ ஸத்யகாமன், ஸத்யஸங்கல்பன். உனக்கு ஆகவேண்டியது ஏதுமில்லை; ஏதேனும் ஆகவேண்டியிருந்தாலும் ஸங்கல்பமாத்திரத்தினால் ஒரு நொடியில் ஆக்கிக் கொள்ள முடியாதா? *நாட்டில் பிறந்து படாதனபட்டு* என்று ஆழ்வார் ஸாதித்தபடி கர்மவச்யர்களும் படாத கஷ்டங்களைப் பட்டுப் பிறக்கவேணுமோ? கீதையில் "பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம், தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே" என்று நீ விளங்கச் சொல்லியிருப்பதை நான் அறியாதவனல்லேன்; நன்கறிவேன். ஸாதுபரித்ராணாதிகளான இந்த காரியங்கள் ஸங்கல்பத்தினாலாகாதவையா? அநாயாஸமாக ஸாதிக்கக் கூடியவற்றை மிகவும் ப்ரயாஸப்பட்டு ஸாதித்தா யென்பது பொருத்தமாக இல்லையே. இதில் எனக்குத் தினவடங்கச் சொல்லவேணும் கண்ணா!

(கண்ண.) இப்போது நான் காடுகளூடுபோய்க் கன்றுகள் மேய்க்கவேண்டியிருப்பதால் மறுபடியும் நாமிருவரும் மாலைப் பொழுதில் கலந்து பேசுவோம்.

(தொடரும்.)

திருவல்லிக்கேணி விசேஷங்கள் 11—4—71




ஸ்ரீமதுபயவே காஞ்சீபுரம் P. B. A. ஸ்வாமிகளின் சதாபிஷேக மஹோத்ஸவம் முதலில் 21—3—71ல் டில்லிமா நகரில் நடந்து, பிறகு காஞ்சியில் ஸ்வாமி திருமாளிகையில் நடந்துகொண்டிருந்த போது, சென்னைவாஸிகளான பெரியார்களுக்கும் பக்தர்களுக்கும கிளர்ந்த ஆசையின்படி திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி ஸன்னிதியிலும் ஸ்ரீஸ்வாமிக்குச் சிறப்புகள் செய்விக்க வேணுமென்று தோன்றி சென்னை ஸத்காலக்ஷேப ஸபையின் மூலமாக அங்கு நிறுவிய சதாபிஷேக நிர்வாகக் கமிட்டியைச் சேர்ந்த கனவான்களின் முயற்சியின் பேரில் ஸ்ரீபார்த்தஸாரதிஸ்வாமி தேவஸ்தானதர்மகர்த்தாக்கள்விசாலமானமனங்கொண்டு ஏற்பாடுசெய்தபடி 11-4-71ல் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அப்போதே பல பத்திரிகைகளில் வெளிவந்தது. அந்த நிகழ்ச்சியைச் சார்ந்த திருவுருவப் படங்கள் அன்று சேகரிக்கப்பட்டவை. ஈண்டு வெளியிடப்படுகின்றன. ஸ்ரீஸ்வாமி முதன் முதலாக திருவல்லிக்கேணி வானமாமலை மடத்திற் கெழுந்தருள, அங்கு ஸன்னிதி அத்யாபக ஸ்வாமிகள் பூர்ணகும்பத்துடன் ஸ்ரீஸ்வாமியை வரவேற்குங் காட்சி இது. ... ... *


ஸ்ரீ P. B. A. ஸ்வாமியின் (பங்குனி விசாக) சதாபிஷேக மஹோத்ஸவத்தைச் சிறப்பாக நடப்பிக்க சென்னை ஸத்காலக்ஷேப ஸபையின் சார்பாக ஏற்படுத்திய கமிட்டியின் அங்கத்தினர்கள்—

தலைவர்—ஸ்ரீமத்பரமஹம்ஸ. ஸ்ரீமந்நாராயண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகள். **சேர்மென்**—பரமார்த்தபூஷணம். நாதெள்ள ஸம்பத்து செட்டியார். **உபதலைவர்கள்**—ஊரா. ஜகன்னாத செட்டியார், A. ஸ்ரீநிவாஸய்யங்கார், கராலபாடி. ராதாகிருஷ்ணய்யா. **கௌரவ கார்யதர்சிகள்**—A. V. கன்னைய நாயுடு, நாதம் & Co. துர்க்கய்ய செட்டி. **தனாதிகாரி**—C. ஸுப்ராயலு செட்டி. **மற்றும் அபிமானிகள்**—ஸ்ரீமான்களான, V. N. வெங்கடவரதாசாரியார், K. S. சம்பகேசய்யங்கார், புத்தூர். S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், M. ஸௌந்தரராஜய்யங்கார் (ஹைதராபாத்), A. N. பரசுராமனவர்கள், டாக்டர். V. ராமையங்கார் (Bangalore), பத்மஸ்ரீ. K. வெங்கடஸாமி நாயுடு, உம்மிடி. ஸ்ரீராமுலு செட்டி, V. எம்பெருமானுர் செட்டி, ஆனந்தகிருஷ்ண செட்டி, டாக்டர். ஸம்பத்தையங்கார், பாதாளம் வெங்கடஸாமி, G. M. அழகிரிஸாமி, கொப்பரம் நடேச செட்டி, இன்னும் பல பெரியார்கள்.

வானமாமலை மடத்தினுள் ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி தேவஸ்தான தர்மகர்த்தாக்க ளுடனும் அந்தரங்க பக்தர்களுடனும் ஸ்வாமியின் காட்சி.



வானமாமலை மடத்தினுள் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி. திருமலை திருப்பதி பெரிய ஜீயர்ஸ்வாமி, ஸ்ரீகாஞ்சீ. அழகியமணவாள ராமாநுஜ ஜீயர்ஸ்வாமி முதலானோருடன் ஸ்வாமியின் காட்சி.



திருவல்லிக்கேணியில்

வானமாமலை மடத்திலிருந்து ஸன்னிதிக்குப் புறப்படுங் காட்சி.



1. ஸ்ரீமத் பரமஹம்ஸ திருமலை திருப்பதி பெரிய ஜீயர் ஸ்வாமி.

2. ஸ்ரீமத் பரமஹம்ஸ. காஞ்சீ வாதிகேஸரி. அழகிய மணவாள யதீந்த்ரப்ரவண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி.


3. ஸ்ரீமத் பரமஹம்ஸ. ஸ்ரீமந்நாராயண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி.

மற்றும் பல பெரியார்கள்

வானமாமலை மடத்திலிருந்து புஷ்கரிணி தென்கரை வழியாய் ஸன்னிதிக்குச் செல்லும் கோஷ்டி.




இதுவுமது



திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி

ஸன்னிதித் திருமுன்பே முப்பத்தாறுகால் மண்டபத்தில்

அருளிப்பாடுடன் திருப்பரிவட்டம் கட்டுதல்




அருளிப்பாடு ஸேவித்தவர் ஸன்னிதி அத்யாபகரான

ஸ்ரீமதுபயவே காவல்கழனி. திருமலை. விஞ்சிமூர். அனந்தாசார்யஸ்வாமி

11—4—1971

ஸன்னிதி பட்டாசாரியர் ஸ்ரீசடகோபன் பஞ்சமுத்திரை ஸாதித்தல்
ஸ்ரீஸ்வாமி சிரம்தாழ்த்தி ஸ்வீகரித்தல்.




ஸ்ரீபார்த்தஸாரதி யுத்ஸவரை கல்யாண மண்டபத்தில் மங்களாசாஸனம் செய்து மீளுதல்.
(அன்று ப்ரஹ்மோத்ஸவத் தொடக்கமாகையால் உத்ஸவர் கல்யாணமண்டபத்தில் எழுந்தருளியிருக்கிறபடி)




ஸ்ரீபார்த்தஸாரதிஸ்வாமி ஸன்னிதிக்குள் ஆண்டாள் ஸன்னிதி முன்னணியில் திருவோலக்கம்.


சதாபிஷேகக் கமிட்டியின் உறுப்பினரான ஸ்ரீஉவே. A. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி P. B A ஸ்வாமிக்குப் பீதாம்பரம் சாத்துகிருர்.




ஸ்ரீமான் கராலபாடி ராதாடுருஷ்ணய்யா ஸ்ரீஸ்வாமியுன் பாராட்டு கோஷ்டியைத் துவக்கிவைக்கிருர்.




பல பெரியார்கள் ஸ்ரீஸ்வாமிக்கு மாலையிடத் தொடங்குதல்.



ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி தேவஸ்தான தர்மகர்த்தாவான
ஸ்ரீமான் ஊரா· ஜகன்னாத செட்டியார் உபசாரபத்திரம் வாசித்தளித்தல்.




ஸ்ரீ—2



ஸ்ரீமான். பரமார்த்தபூஷணம் நாதெள்ள ஸம்பத்து செட்டியாரது வாழ்த்துரை.



ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சன பத்ராதிபரும் திருச்சி அட்வகேட்டுமான ஸ்ரீமதுபயவே. S கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்ஸ்வாமியின் பாராட்டுரை.




ஸ்ரீ வெங்கடாசலம், டெப்டி கமிஷனர் (H.R & C. Board) அவர்கள் உரை நிகழ்த்துகிருர்கள்.

ஸ்ரீபார்த்தஸாரதிஸ்வாமி ஸன்னிதியினுள்ளே ஆண்டாள் திருமுன்பே பாராட்டுரைகள்.

ஸ்ரீ வெங்கடாசலம், டெப்டி கமிஷனர் (H R. & C Board) அவர்கள் ஸ்ரீ ஸ்வாமிகள் சதாபிஷேக விழாவில் கலந்துகொண்டார்கள்.



விழாவிற்கு வந்திருந்த பிரமுகர்களில் ஒருபகுதி.




ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீமந்நாராயண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியின் பாராட்டுரை.




ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீமந் நாராயண ராமாநுஜஜீயர் ஸ்வாமிகள் பொன்னுடை போர்த்தல்.



ஸ்ரீமான் V. எம்பெருமானுர் செட்டி (Hoe & Co.) ஸ்வாமியைப் பாராட்டிப் பணமுடிப்பு வழங்குதல்.



நம் ஸ்வாமியின் நன்றி பாராட்டுரையோடு ஸபை முடிவுபெற்றது.




இப்படங்களை யெல்லாம் சேகரித்து ஒழுங்குபடுத்திப் பிரசுரித்தவர்கள் ஸ்ரீமான் D. கிருஷ்ணமூர்த்தி (Editor Free India), V. N. தேவநாதன் ஆகிய இருவரும்.




கரியமாணிக்கத்தில் மஹோத்ஸவம்

திருவரங்கம் பெரிய கோயிலுக்கு யோஜனை தூரத்தில் கரியமாணிக்கமென்கிற அக்ரஹாரம் விலக்ஷண ஸ்ரீவைஷ்ணவர்கள் வாழுமிடமான சிறந்த ஸ்தலம். இங்குத் தேவப்பெருமாள் ஸன்னிதி அமைந்துளது அவருடைய திருவவதார நக்ஷத்ரமான சித்திரையில் ஹஸ்தத்தையொட்டி ஏழுநாள் விசேஷமானமஹோத்ஸவம் வேதபாரரயண திவ்யப்ரபந்த ஸேவைகளுடனும் வித்வான்களின் உபந்யாஸங்களுடனும் நடக்கின்றது. இவ்வருஷம் சிறப்பாகக் கண்டருளின காட்சிகள் இவை.



ஸ்ரீமதுபயவே. திருமலை ஈச்சம்பாடி சடகோபாசாரியர்



இங்கு கைகட்டி நிற்பவர் மேலே குறித்த சடகோபாசாரியர். பக்கத்தில் நிற்பவர் அவருடைய திருக்குமாரரான (வரதகுட்டியென்கிற) வரதாசாரியர், சிறுவன் அவருடைய சிரஞ்சீவி செல்வக்குமாரன். ப்ரஸ்துதரான ஸ்ரீசடகோபாசாரியர் ஸ்ரீகாஞ்சியில் வடவண்டை மாட வீதியில் வாழ்பவர். எழுபத்தைந்து பிராயம் நிரம்பியவர். ஸ்ரீமதுபயவே. (கீர்த்திமூர்த்தியான) மாம்பள்ளம் ஸுதர்சனாசார்ய ஸ்வாமி ஸந்நிதியில் வேதமோதினவர். திவ்ய ப்ரபந்தமும் அதிகரித்தவர். சடகோப நிலய பாடசாலையில் ஸம்ஸ்க்ருத ஸாஹித்யாதிகள் வாசித்தவர். தேவப்பெருமாளுடைய நித்ய கைங்கர்யநிஷ்ணாதர்.

— மீண்டும் நினைவூட்டுதல் —

இக்காலத்தில் ஆங்காங்கு யோக்யதை பெற்று வாழ்பவர்களான மஹான்களின் திருவுருவப் படங்களை சேகரித்து ஸ்ரீராமாநுஜன் மூலமாக வெளியிட மனோரதங் கொண்ட நாம் ஸமயவிசேஷங்களில் வெளியிட்டு வருகிறோம் ஆங்காங்குள்ள பெரியார்களின் திருவுருவப் படங்களை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறோம்

—ஆசிரியர்.

ஸ்ரீ:

ஸ்ரீ மணவாள மாமுனிகள் 600-வது ஆண்டு விழா

ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி ஸன்னிதியில் ப்ரதிஷ்டாபிதமான உபதேசரத்னமாலை

சிலாசாஸனத்தின் ஸாராம்சம்—ஒருபகுதி

ஸ்ரீ மணவாள மாமுனிகளின் தனிச் சிறப்பு.

1. ஆழ்வார்கள் தாங்கள் அவரித்த நாள்களிலும் வாழ்வான நாள் நமக்கு எதிராசர் உதித்தருளும் சித்திரையில் செய்ய திருவாதிரை. இதுபோல ஆசார்யர்கள் தாங்கள் அவதரித்த நாள்களிலும் வாசாமகோசரமான வீறுடையநாள் அந்த மில்சீர் மணவாளமுனிப் பரனவதாரம் செய்த ஐப்பசியில் திருமூலம்.

2. ஸ்ரீ மாமுனிகள் "உபதேசரத்தினமாலை" என்கிற பெயரிட்டு ஆசார்ய சிஷ்யக்ரமங்களைப் பரக்க உபதேசித்தும், தாமே அனுட்டித்துக் காட்டியும் உலகம் உய்யும் வகையை நமக்குக் காட்டினுர். திருவாய்மொழியின் ஸாரத்தை நித்யானுபவம் பண்ணுவதற்குப் பாங்காக நூற்றந்தாதியாய் அருளிச்செய்தார்.

3. பண்டொருகால் திருமங்கை மன்னன் எம்பெருமானை நோக்கி "வெண் சங்கமொன்றேந்திய கண்ணா! நின்றனக்கும் குறிப்பாகில் கற்கலாம் கவியின் பொருள் தானே" என்றுர். அன்று முதல் இன்கவியின் பொருளைக் கேட்கக் காதலித்திருந்த எம்பெருமான் ஆதிசேஷாம்சமான ஸ்ரீ மணவாளமாமுனிகள் பக்கலிலே கேட்டுக் கிருதார்த்தனுயினன். அந்த சிஷ்யபாவம் நீடூழிகாலம் நிலவுமாறு உலகமெல்லாம் போற்றும் "ஸ்ரீ சைலேசத்தனிலனை" உபகரித்தான். இத் தனியன் ஸ்ரீ பதரிகாச்ரமமுட்பட ஸகல திவ்ய தேசங்களிலும் ஒரேநாளில் ஆவிர்ப்பவித்த அதிசயம் அற்புதமானது.

4. எம்பெருமானுரை அடிபணிந்து "ஸ்ரீ வைஷ்ணவ நம்பி" யென்கிற தாஸ்ய நாமம் பெற்ற திருக்குறுங்குடிநம்பி யதீந்த்ரப்ரவணர்பக்கல் திருவாய்மொழிப்பொருள் கேட்டு அந்ததாஸ்யம் தேசமெல்லாம் விளங்க நம்பெருமாளான திருக்கோலத்தில் ஸ்ரீசைலேசத்தனியனிட்டு நாடுநகரமும் நன்கறிய வைத்ததோடு நில்லாமல் ஆசார்யனுடைய தீர்த்ததினத்தை கும்பகிருஷ்ணத்வாதசி நன்னுளென்று உலகமறியக் கொண்டாடி வருவது உலகம் புகழும் அனுட்டானம்.

5. திருக்கோட்டியூரில் ஆசார்ய நியமனத்தை மீறிச் சிலமனிசர்க்கு சிறிது காலம் மாண்பொருளுரைத்த எம்பெருமானுர் போலன்றிக்கே "லக்ஷ்மீநாதஸமாரம்பாம்" என்னும்படி ப்ரதமாசாரியனுன ஸ்ரீரங்கநாதனுக்கே அடைவுபட ஸகலார்த்தங்களையும் ஒருஸம்வத்ஸர காலமெடுத்துரைத்த மாமுனிகளினேற்றம் இயம்ப வரிது. மாமுனிகள் ஸகல சாஸ்த்ரார்த்தங்களையும் நமது கைத்தலத்திலாக்கின பேருதவிக்குக் கைம்மாருக நம் பார்த்தஸாரதி யெம்பெருமான் அந்த மாமுனிகளுக்காகத் திருக்கைத்தல ஸேவைஸாதிப்பது மிகப் பொருத்தமான கண்கொள்ளாக் காட்சி. ஸ்ரீ ரங்கநாதன் தனக்கு ஈடுஸாதிக்கநியமித்தவாறே "நாமார், பெரியதிரு

மண்டபமார்! நம்பெருமாள் தாமாக்வென்னைத் தனித்தழைத்து 'நீ நாடோறும் மாறன் மறையின் பொருள் எனக்கு நல்கு' என்று வாய்ந்து ஏவுவதே" என்று விநயங்காட்டின பரமஸாத்விகரான ஸ்ரீ மணவாளமாமுனிகளின் திருவருளால் ஸகலதிவ்யதேசங்களும் தீதொன்றுமின்றியே பொலிக பொலிக பொலிக.

ஈடு சாதிக்கத் தொடங்கிய நாள்

கலி 4533 (பரீதாபிஸு ஆவணிமீ 31உ வெள்ளிக்கிழமை சுக்ல சதுர்த்தி ஸ்வாதீ நக்ஷத்திரம்) 16—9—1432.

ஈடு சாற்றுமறையாகிய ஸ்ரீ சைலேசத் தனியன் அவதரித்த நாள்

கலி 4534 (பிரமாதீசஸு ஆனிமீ பௌர்ணமி ஞாயிறு மூல நக்ஷத்திரம்) 9—7—1433.

ஸாதாரணஸு கார்த்திகைத் திருமூலம் (30—11—70)

ஜீயர் திருவடிகளே சரணம்.

—தேசூர் நல்லான் சக்ரவர்த்தி ஸ்ரீநிவாஸ வரதாசாரியர் ஸ்வாமி கைங்கர்யம்.

